செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பயிலரங்கம் - 17 நாள்: 18.01.2024

## வரலாறு, சமூகவியல் மற்றும் மானிடவியல் புலம்

நடத்தும்

## செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கியங்கள் காட்டும் தமிழர் மரபும் நீட்சியும்

(தெய்வம், வழிபாடு, சடங்கு, குலக்குறி,….)

**(14.02.2024 - 23.02.2024)**

### அறிவிப்பும் அழைப்பும்

செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கியங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் நாட்டுப்புற வழக்காறுகள் ஆதாரமாக இருக்கின்றன என்பது குறித்து அறிஞர்கள் பலரும் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர்.

‘சங்க இலக்கியங்கள், பலகாலம் வாய்மொழியாக வழங்கிவந்த பின்னரே ஏட்டில் எழுதிவைக்கப்பட்டன என்பார் அறிஞர் க.கைலாசபதி அவர்கள். அ.மு.பரமசிவானந்தம் அவர்கள் ‘வாய்மொழி இலக்கியம்’ எனும் நூலில் வாய்மொழி வழக்காறுகள் எழுத்திலக்கியங்களாக மாற்றம்பெற்றதை ஆராய்ந்து வெளிப்படுத்தியிருப்பார். ‘இலக்கியக் கூறுகள் பலவும் வாய்மொழி வழக்காறுகளிலிருந்தே தோற்றம்பெற்றவை’ என்பார் அறிஞர் தே.லூர்து. இப்படியாக வாய்மொழி மரபிற்கும் செவ்வியல் மரபிற்கும் உள்ள தொடர்பைப் பலரும் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர்; வெளிப்படுத்தியும் வருகின்றனர்.

மனிதரால் உருவாக்கப்படும் இலக்கியம் சமூகத்திலிருந்தே பெறப்படுகிறது. அது வாய்மொழி மரபில் மிகவும் உயிர்ப்புடன் நிற்கிறது. எழுத்து மரபில் அதுவே அதிகாரமாகப் பரிணமித்துவிடுகிறது என்பார் ஆய்வாளர் பக்தவத்சல பாரதி.

பல்வேறு நோக்கில் ஆய்வுசெய்யும் அளவிற்கு நாட்டுப்புற வழக்காற்றுத் தரவுகள் செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கியங்களில் நிறைந்துகிடக்கின்றன. இந்நிலையில், செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கியங்கள் காட்டும் தெய்வம், தொன்மம், வழிபாடு, சடங்கு, குலக்குறி போன்றவற்றை நாட்டுப்புறவியல் அணுகுமுறையில் நோக்கும் **‘செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கியங்கள் காட்டும் தமிழர் மரபும் நீட்சியும்’** என்ற

பயிலரங்கை நடத்தச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் திட்டமிட்டுள்ளது. பயிற்றுரை, கள ஆய்வு, மரபுசார் கலைநிகழ்ச்சி ஆகிய நிலைகளில் இப்பயிலரங்கம் நடைபெறும்.

ஆய்வு மாணவர்களும் ஆசிரியர்களும் நேரடியாகப் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் துறைசார்ந்த அறிஞர்கள் பயிற்சியளிக்க உள்ளனர். தமிழியல் ஆய்வுக் களத்தை வளப்படுத்தும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வாளர்களும், இத்துறையில் ஆர்வமுள்ள கல்லூரி / பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் இப்பயிலரங்கில் பங்குபெறலாம்.

**பயிலரங்கின் விதிமுறைகளும், விவரங்களும் பின்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை: 40
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 14.02.2024 முதல் 23.02.2024 முடிய 10 நாள்கள்
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00மணி முதல் மாலை 5.00 மணி வரை.
4. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாள்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
5. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
6. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து hsa@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/ அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக்கூடாது.
7. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
8. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/ புலனம்வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பிவைக்கப்படும்.
9. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
10. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள்: 06.02.2024. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக்கொண்டும் ஏற்கப்படமாட்டா.
11. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கபட்டவர்களுக்கு 07.02.2024 அன்று மின்னஞ்சல் / புலனம்மூலமாகத் தகவல்தெரிவிக்கப்படும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते

## வரலாறு, சமூகவியல் மற்றும் மானிடவியல் புலம்

நடத்தும்

## செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கியங்கள் காட்டும் தமிழர் மரபும் நீட்சியும்

(தெய்வம், வழிபாடு, சடங்கு, குலக்குறி,....)

**(14.02.2024 - 23.02.2024)**

**விண்ணப்பப் படிவம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | | | | நிழற்படம் | |
| | | ஆங்கிலம் | | | | | |
| 2. | ஆய்வியல் நிறைஞர் / முனைவர் பட்ட ஆய்வாளர் / பேராசிரியர் | | | | | | |
| 3. | பிறந்த நாள் / வயது | | | | | | |
| 4. | பாலினம் | | | | | | |
| 5. | வகுப்பு (√) செய்யவும் | பொது | | இ.பி.வ. | | பட்டியல் இனம் | |
| 6. | கல்வித் தகுதிகள் | | | | | | |
| 7. | ஆய்வாளராக / பேராசிரியராகச் சேர்ந்த நாள் | | | | | | |
| 8. | துறை | | | | | | |
| 9. | நிறுவன முகவரி (தொலைபேசி, மின்னஞ்சல் முகவரியுடன்) | | | | | | |
| 10. | இல்ல முகவரி (தொலைபேசி, மின்னஞ்சல் முகவரியுடன்) | | | | | | |
| 11. | புலன எண் | | | | | | |
| 12. | ஆய்வியல் நிறைஞர்/முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | | | | | | |

| | | |
|---|---|---|
| 13. | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக | ஆம்<br><br>இல்லை |

**நாள்:** **(கையொப்பம்)**

**இடம்:**

**நெறியாளர் / துறைத்தலைவர் /முதல்வர் / பதிவாளர் கையொப்பம்**

**உரிய முத்திரையுடன்**